**FIRST INFORMATION REPORT**

**முதல் தகவல் அறிக்கை**

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

**Under Section 173 BNSS** ~~(Under Section 154 Cr.P.C.)~~ (கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8082317

1. District மாவட்டம் : பெரம்பலூர்    PS காவல்நிலையம் : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு    Year ஆண்டு : 2024    FIR No. மு.த.அ. எண் : 02    Date நாள் : 01-07-2024

2. (i) Act சட்டம் :    Sections பிரிவுகள் : 7

   (ii) Act சட்டம் : PREVENTION OF CORRUPTION ACT 1988 (as ammended 2018)    Sections பிரிவுகள் :

   (iii) Act சட்டம் :    Sections பிரிவுகள் :

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from நாள் முதல் : 27.06.2024    Date to நாள் வரை : 01.07.2024

   Time Period : நேர அளவு    Time from நேரம் முதல் : காலை மாலை 07.00    Time to நேரம் வரை : 09.00

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 01.07.2024    Time நேரம் : 09.00

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் :    Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : சுமார் 2 KM மேற்கு

   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டவர்/ தகவல் தந்தவர் பெயர் : R. சுந்தரராஜ்    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : ராஜு

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு    (d) Nationality : நாட்டினம்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் : அங்காடி மையம் மேலாளர்    (g) Address : முகவரி : 2/230, மேற்கு தெரு K.M.K தெரு. அம்மாபாளையம் (PO), பெரம்பலூர் (TK) பெரம்பலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   பழனிச்சாமி, துணை ஆட்சியர், பெரம்பலூர் ஆட்சியர் அலுவலகம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   காலதாமதமில்லை.



Scanned by CamScanner

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்டவை சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்டவை சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

01.07.2024-ம் தேதி காலை சுமார் 09.00 மணிக்கு பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது R.துரைராஜ் என்பவர் என் முன் ஆஜராகி கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட ஒரு புகார் கொடுத்தார். அந்த புகாரை பெற்று புகாரின் தன்மையும் புகார்தாரர் மற்றும் எதிரியின் நடத்தை மற்றும் உண்மை தன்மை பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டேன். அந்த புகாரின் சாரம் பின்வருமாறு உள்ளது. அனுப்புநர் R.துரைராஜ், வயது 57/2024, த/பெ ராஜு, 2/230 மேற்கு தெரு, கே.எம்.கே தெரு, அம்மாபாளையம் அஞ்சல், பெரம்பலூர் தாலுக்கா, பெரம்பலூர் மாவட்டம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, பெரம்பலூர் மாவட்டம், மதிப்பிற்குரிய அம்மா, நான் பெரம்பலூர் மாவட்டம், அம்மாபாளையம் கிராமம், 2/230 மேற்கு தெருவில் வசித்து வருகிறேன். நான் டிசிஇ வரை படித்துள்ளேன். திருச்சியை சேர்ந்த மனோகரன் என்பவர் பெரம்பலூர் புதிய பேருந்து நிலையம் பின்புறம் உள்ள எம்.எம் நகரில் அகிலா மஹால் என்ற திருமண மண்டபம் வைத்து நடத்தி வருகிறார்.

(Separate Sheet Enclosed)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused investigation / transferred to PS .................................... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ குற்றமுறையிட்டவருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

1-7-2024.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டவர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 1.7.2024 14:10 Hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் Hemachitra K.S
Rank: நிலை DSP, VAC Pbr No. எண் ..........

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21 3 16(HCL-12)p.2

Scanned by CamScanner

நான் மேற்கண்ட அகிலா மஹாலில் மேலாளராக பணியாற்றி வருகிறேன். நான் அகிலா மஹாலுக்கு பில்டிங் லைசன்ஸ் சான்று வேண்டி கடந்த வருடம் 08.12.2023-ம் தேதி படிவம் A, B, C ஆகிய படிவங்களுடன் விண்ணப்ப கட்டணத்தின் DD -யையும் இணைத்து பெரம்பலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பித்து ஒப்புகை சீட்டு பெற்றிருந்தேன். நான் அவ்வபோது தாலுக்கா அலுவலகம் சென்று எனது விண்ணப்பம் பற்றி கேட்பேன். இதற்கிடையே எனது கைபேசிக்கு DT பழனிச்சாமி என்ற சார் அழைத்து உங்கள் மனு Process ஆகிட்டு இருக்கு சார் நீங்க என்னைக்கு ஃபரியா இருக்கீங்களோ அப்ப 6 மணிக்கு மேல் தாலுக்கா ஆபிஸ் பக்கம் வாங்க என்று கூறினார். இந்நிலையில் 27.06.2024-ம் தேதி அன்று சுமார் மாலை 07.00 மணிபோல் நான் வட்டாட்சியர் அலுவலகம் சென்று பார்த்தபோது அங்கிருந்த துணை வட்டாட்சியார் திரு.பழனிச்சாமி என்பவர் என்னிடம் தங்களது மஹாலை ஆய்வு செய்ததில் அனைத்தும் சரியாக இருக்கிறது. மேலும் உங்களுக்கு ஃபிட்னஸ் சான்று வேண்டுமென்றால் ரூபாய் 25,000/- லஞ்சமாக தர வேண்டும் என்று கூறினார். நான் உடனே அவரிடம் சார் என்னிடம் ஆவணங்கள் எல்லாம் சரியாக தானே இருக்கிறது என்று கேட்டதற்கு அவர் நீங்கள் வாங்க போகும் ஃபிட்னஸ் சர்டிபிகேட் மூன்று வருடத்திற்க்கு செல்லதக்கது அதனால் நீங்கள் மூன்று வருடத்திற்க்கு இந்த மஹால் சம்மந்தமாக வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வர தேவையில்லை. எனவே, இப்போது எனக்கும், உயர் அதிகாரிகளை கவனிக்கவும் மற்றும் இதர அலுவலக செலவு சேர்த்து வேண்டுமானால் நான் கேட்ட தொகையிலிருந்து ஒரு 5000 ரூபாய் மட்டும் குறைத்து கொண்டு ரூபாய் 20,000/- மாக கொடுங்கள் எனக் கூறினார். நான் சற்று நேரம் மௌனமாக இருந்தேன். அப்போது DT சார் என்னிடம் என்ன சார் நீங்க நான் கேட்ட பணத்தை தந்துருவீங்களா உங்க பைல்ல டைப்பண்ண சொல்லட்டுமா என்று கேட்டார். நானும் அப்போது சூழ்நிலையை சமாளிப்பதற்காக சரிங்க சார் நீங்கள் கேட்ட பணத்தை நான் தந்து விடுகிறேன் என்று சொன்னேன். அதற்க்கு அவர் அப்போ நான் சொல்லுற நம்பருக்கு Gpay பண்ணிவிடுங்க என்று சொன்னார். நான் சற்று சுதாரித்து கொண்டு எனது வங்கி கணக்கில் அவ்வளவு பணம் இல்லை என்று கூறிவிட்டு பணத்தை ரெடி பண்ணி தான் சார் தரனும் என்று கூறியதற்க்கு அவர் சரி நான் ஃபைல்லை ரெடி பண்ணி நான் சொல்லி தாசில்தாரிடம் கையொப்பம் பெற்று வைக்கிறேன், நீங்கள் பணத்தை ரெடி பண்ணிட்டு சொல்லுங்க, என்று அவர் கூறியதற்கு நானும் சரிங்க சார் என்று

Scanned by CamScanner

சொல்லிவிட்டு அன்று இரவு வீட்டிற்கு சென்றுவிட்டேன். பின்னர் நான் மறுநாள் வெள்ளிக்கிழமையன்று 28.06.2024 ம் தேதி மதியம் சுமார் 12.15 மணிபோல் எனது தொலைபேசி எண் 99448-15469 -லிருந்து துணை தாசில்தார் பழனிச்சாமியின் கைபேசி எண்ணான 97872-14343 எண்ணிற்கு தொடர்பு கொண்டு சர்டிபிகேட் ரெடியாகிவிட்டதா என்று கேட்டதற்கு DT பழனிச்சாமி சர்டிபிகேட் ரெடி. நீங்க நான் கேட்ட ரூபாய் 20,000/- பணத்தோட வாங்க கோபுர சீல் வைத்து உங்கள் சர்டிபிக்கேட்டை கொடுத்து விடுகிறேன் என்று சொன்னார். மேலும் திங்கள்கிழமை இது பற்றி என்னிடம் பேசுமாறு கூறினார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. எனவே மேற்கண்ட துணை தாசில்தார் திரு.பழனிச்சாமி அவர்கள் என்னிடம் லஞ்சமாக கேட்ட ரூபாய் 20,000/- பணத்தோடு இந்த புகாரினை தங்களிடம் கொடுத்து மேற்கண்ட துணை தாசில்தார் திரு.பழனிச்சாமி என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு இந்த புகார் மனுவினை கொடுக்கிறேன். இப்படிக்கு (Sd) XXXXX R.Durairaj. 01.07.2024, Submitted, Sir, Received this Computerised complaint from the complainant on 01.07.2024 at 09.00 hrs, verified and ascertained its genuineness through sources, and registered a case on the complaint on 01.07.2024 at 14.00 hrs in Perambalur Vigilance and Anti-Corruption Detachment Crime No.02/2024, u/s 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018). (sd) K.S.Hemachithra., Deputy Superintendent of Police, Vigilance and Anti-Corruption, Perambalur. I am submitting the Original F.I.R. along with the complaint to the Hon'ble Court of the Chief Judicial Magistrate/Special Judge, Perambalur and the copies of the F.I.R to all other concerned Officials.

1/7/2024

Hemachithra K.S.

DSP, PBR, VAC

Scanned by CamScanner